**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்.**
**முன்னிலை : திருமதி. A. சுபஸ்ரீ L.L.M.,**
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருப்பூர்.**

**2025–ம் ஆண்டு நவம்பர் மாதம் 25ஆம் நாள் செவ்வாய்கிழமை**

**திருவள்ளுவராண்டு 2056, ஸ்ரீ விசுவாவசு வருடம், கார்த்திகை திங்கள் 9ம் நாள்**

**இ.ம.எண்.502/2025**
**இன்**
**அ.வ.எண்.280/2020**

M. கமலம் ..மனுதாரர்/பிரதிவாதி

..எதிர்..

B.விஜயலட்சுமி ..எதிர்மனுதாரர்/வாதி

இம்மனுவானது கடந்த 17.11.2025ம் தேதியன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்த போது, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.கலையரசன் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.N.சுப்பிரமணியம் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், ஆவணங்களை பரிசீலித்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

**உத்தரவு**

கடந்த 05.12.2022ம் தேதி அசல் வழக்கில் மனுதாரருக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைப்பட்ச உத்தரவை ரத்து செய்யக் கோரி 1908ம் ஆண்டு உரிமையியல் நடைமுறை சட்டம், கட்டளை 9 விதி 7ன் கீழ் மனுதாரர்களால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. <u>மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம் :</u>**

**2.1** கடந்த 29.11.2022ம் தேதியன்று தினமலர் செய்திதாளில் அறிவிப்பு வெளியிடப்பட்டு, அதனடிப்படையில் 05.12.2022ம் தேதியன்று மனுதாரர்/பிரதிவாதிக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் வேண்டுமென்றே 02.11.2022ம் தேதி வரை மனுதாரருக்கு அழைப்பாணை அனுப்பாமல் இருந்துள்ளார். அதன் பிறகு நீதிமன்றத்தை ஏமாற்றி செய்திதாளில் அறிவிப்பு வெளியிட்டு ஒருதலைபட்ச உத்தரவு பெற்றுள்ளார். 2024ம் ஆண்டு ஏப்ரல் மாதம் மனுதாரரின் முகவரிக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை சார்வு செய்யப்பட்டது. அது குறித்து மனுதாரர், எதிர்மனுதாரரிடம் விசாரித்தபோது மேற்படி அறிவிப்பு தவறுதலாக அனுப்பப்பட்டதாகவும், 2020ம் ஆண்டே வழக்கை திரும்ப பெற்றுக்கொண்டதாகவும் கூறினார். எதிர்மனுதாரர் கூறியதை நம்பி மனுதாரர் எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இருந்துவிட்டார்.

**2.2** 2024ம் ஆண்டு செப்டம்பர் மாதம் தாவா சொத்தில் இருந்து மனுதாரரை வெளியேற்ற போவதாக எதிர்மனுதாரர் கூறி வந்தார். எதிர்மனுதாரரின் நடவடிக்கையில் சந்தேகம் கொண்டு வழக்கறிஞரை விசாரித்தபோது தான் வழக்கு விபரம் மனுதாரருக்கு தெரியவந்தது. மனுதாரரின் உடல்நிலை ஏற்பட்ட அறுவைசிகிச்சைகளாலும், உடல்நிலை பாதிப்பாலும் தகுந்த நேரத்தில் வழக்கறிஞரை சந்திக்க இயலவில்லை. எனவே, மனுதாரருக்கு எதிராக 05.12.2022ம் தேதியன்று பிறப்பிக்கப்பட்டுள்ள ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்யகோரி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. <u>எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்</u> :

மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனு பொய் மற்றும் மோசடியான ஒன்று அது சட்டப்படியும் பொருண்மைப்படியும் நிலைக்கத்தக்கதல்ல. அசல் வழக்கின் தீர்வை காலதாமதப்படுத்தும் நோக்கத்துடன் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. காலதாமதமாக இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதற்கான காரணம் மனுவில் தெரிவிக்கப்படவில்லை. அசல் வழக்கில் 30.04.2024ம் தேதியன்று மனுதாரர்/பிரதிவாதிக்கு அழைப்பாணை சார்வு செய்யப்பட்டும் அவர் நீதிமன்றத்தில் முன்னிலையாகாததால் அவருக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அசல் வழக்கு நிலுவையில் உள்ளதை தெரிந்தும் மனுதாரர் நீதிமன்றடத்தில் முன்னிலையாகவிலலை. அசல் வழக்கில் வாதுரைக்காக வாய்தா போடப்பட்டுள்ள இந்நிலையில் மனுவை தள்ளுபடி செய்யுமாறு எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. இருதரப்பிலும் வாய்மொழி சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை. இருதரப்பு வாதுரையும் கேட்கப்பட்டது.

5. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதிகள் யாதெனில், " மனுதாரர் கோரிய படி மனுவை அனுமதிக்க வேண்டுமா? என்பதேயாகும்".

6. <u>தீர்வு</u> :–

**6.1** மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அவரது வாதத்தில், அசல் வழக்கில் மனுதாரர்/பிரதிவாதிக்கு எதிராக பிறப்பிக்கப்பட்டுள்ள ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து இம்மனுவை அனுமதிக்குமாறு வாதிட்டார்.

**6.2** எதிர்மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அவரது வாதத்தில், 2020ம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்ட அசல் வழக்கில் மனுதாரர்/பிரதிவாதிக்கு நீதிமன்றம் மூலம் அழைப்பாணை சார்வு செய்யப்பட்டும் அவர் முன்னிலையாகாமல் அசல் வழக்கில் வாதுரைக்காக வாய்தா போடப்பட்டுள்ளதால் இம்மனுவை தள்ளுபடி செய்யுமாறு வாதிட்டார்.

**6.3** இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. மனு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. அசல் வழக்கானது பாகப்பிரிவினை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி எதிர்மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கில் மனுதாரர்/பிரதிவாதிக்கு எதிராக நாளிதழில் அறிவிப்பு கொடுக்கப்பட்டு அதனடிப்படையில் மனுதாரர்/பிரதிவாதிக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அசல் வழக்கில் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் சாட்சி விசாரணை முடிக்கப்பட்டு வாதுரைக்காக வாய்தா போடப்பட்டுள்ள நிலையில் மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**6.4** அசல் வழக்கானது பாகப்பிரிவினை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இருதரப்பினர்களுக்கும் அவர்களது தரப்பு வழக்கை முன்வைத்து, இருதரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்களை பரிசீலித்து, அசல் வழக்கில் தீர்வு காண்பது தான் இருதரப்பினர்களுக்கும் இறுதி தீர்வாக இருக்கும் என்று முடிவு செய்து, மனுதாரருக்கு எதிராக அசல் வழக்கில் பிறப்பிக்கப்பட்டுள்ள ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து, இம்மனுவை அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

**முடிவில்**, மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனுவை அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்ட பின்னர், என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2025ம் ஆண்டு நவம்பர் மாதம் 25ம் நாள் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டு, இன்றே பதிவேற்றம் செய்யப்பட்டது.

A SUBASHRI
Digitally signed by A SUBASHRI
Date: 2025.11.25 17:40:08 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.

**<u>மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள்</u>**

..இல்லை.

A SUBASHRI
Digitally signed by A SUBASHRI
Date: 2025.11.25 17:40:14 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.